
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 105 | 4 Pages | 13.11.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 105 | 4 பக்கங்கள் | 13.11.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை**

**விளக்கம்:**
மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ.

## பிரஜ்வல் ரேவண்ணாவின் ஜாமீன் மனு தள்ளுபடி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு



புதுடெல்லி, நவ.13

கர்நாடக மாநிலம் ஹாசன் தொகுதி முன்னாள் எம்.பி. பிரஜ்வல் ரேவண்ணா, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததாக கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். 3 பாலியல் வழக்குகள் அவர் மீது பதிவாகி உள்ளது. இதில் முதல் 2 வழக்குகளில் போலீசார், காவலில் எடுத்து விசாரணை நடத்தினர்.

இதையடுத்து, 3வது பாலியல் வழக்கில் மீண்டும் சிறப்பு புலனாய்வு குழுவினர் பிரஜ்வல் ரேவண்ணாவை காவலில் எடுத்து விசாரணை நடத்தி வந்தனர். இதற்கிடையே, பாலியல் வழக்கில் இருந்து ஜாமீன் கோரி பிரஜ்வல் ரேவண்ணா கர்நாடக ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு கடந்த மாதம் 21ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்து கோர்ட்டு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், பாலியல் வழக்கில் ஜாமீன் கோரி பிரஜ்வல் ரேவண்ணா சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு இன்று நீதிபதிகள் டெலா எம் திரிவேதி மற்றும் சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ஜாமீன் மறுத்த கர்நாடக ஐகோர்ட்டின் தீர்ப்பில் தலையிட முடியாது என்று கூறினர். இதையடுத்து, ரேவண்ணா சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோகத்கி, 6 மாதங்களுக்கு பிறகு கோர்ட்டை அணுக அனுமதி கோரினார். ஆனால் இது குறித்து எதுவும் கூற முடியாது என்று கூறிய நீதிபதிகள், அவரது மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## வயநாட்டில் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் பிரியங்கா காந்தி



வயநாடு, நவ.13

கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் போட்டியிட்ட மற்றொரு தொகுதியான உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதியிலும் வெற்றி பெற்றார். ஒருவேட்பாளர் இருதொகுதிகளில் வெற்றி பெற்றாலும், அதில் ஒன்றை தியாகம் செய்ய வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் விதி ஆகும். இதையடுத்து ராகுல் காந்தி வயநாடு தொகுதியை ராஜினாமா செய்தார். இதையடுத்து அந்த தொகுதி காலியானது. இதனை தொடர்ந்து தேர்தல் ஆணையம், வயநாடு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவித்தது.

இதன்படி வயநாடு நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தல் வரும் 13ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் காங்கிரஸ் சார்பில் தேசிய பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார். இதன் மூலம் அவர் முதல் முறையாக தேர்தலில் களம் காண்கிறார். அவர் சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி ஆகியோர் உடன் சென்று கடந்த 23ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்தார்.

அவரை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சத்யன் மொகெரி, பா.ஜனதா சார்பில் நவ்யா ஹரிதாஸ் போட்டியிடுகின்றனர். வயநாடு இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி கடந்த சில நாட்களாக அங்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

வயநாட்டில் தேர்தல் பிரசாரம் இன்று மாலையுடன் நிறைவடைய உள்ள நிலையில், இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் பிரியங்காகாந்தி ஈடுபட்டுள்ளார். வயநாடு சுல்தான் பத்தேரியில் வாகன பேரணியில் பிரியங்கா காந்தி ஈடுபட்டுள்ளார். அவருடன் அவரது சகோதரரும் மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தியும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

## டெல்லி: மிகவும் மோசமான நிலைக்கு சென்ற காற்றின் தரம்...மக்கள் அவதி

புதுடெல்லி, நவ.13

தலைநகர் டெல்லியில் குளிர்காலம் தொடங்கியது முதலே காற்று மாசு அதிகரித்துகாணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் காற்றின் தரம் இப்படித்தான் மோசமடையும்.

இந்நிலையில், டெல்லியில் கடந்த சில நாட்களாக காற்று மாசு அதிகரித்து வருகிறது. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகளின்படி, கடந்த 24 மணி நேரத்தில் டெல்லியில் காற்று தரக் குறியீடு (AQI) 349 ஆக பதிவாகியுள்ளது. காற்றின் தரம் 'மிகவும் மோசமான' பிரிவில் இருந்ததால், டெல்லியின் பல்வேறு பகுதிகள் இன்று காலை புகைமூட்டமாக காணப்பட்டது. காற்று மாசு காரணமாக பொதுமக்கள் சுவாச பிரச்சினை, சரும நோய்கள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். பவானா மற்றும் ஜஹாங்கிர்புரி ஆகிய பகுதியில் காற்றின் தரம் கடுமையான பிரிவில் பதிவாகியுள்ளது. காற்று மாசை கட்டுப்படுத்த டெல்லி அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

காற்று தரக் குறியீடு என்பது காற்றின் தரத்தை குறிப்பதற்கு பயன்படும் ஒரு அளவு ஆகும். இந்த குறியீடு 0 முதல் 50 வரை இருந்தால் காற்று நல்ல தரத்துடன் உள்ளது என்று பொருள். அதே போல் 51 முதல் 100 வரை இருந்தால் காற்றின் தரம் திருப்திகரமான அளவில் உள்ளது. 101 முதல் 200 வரை இருந்தால் மிதமான தரம், 201 முதல் 300 வரை இருந்தால் மோசமாக உள்ளது. 301 முதல் 400 வரை இருந்தால் மிக மோசமாக உள்ளது. 401 முதல் 500 வரை இருந்தால் கடுமையாக காற்று மாசடைந்து உள்ளது என்று அறியப்படுகிறது.

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் 8 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் உதவி: முதல்அமைச்சர் வழங்கினார்

சென்னை, நவ.13

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் தனது சொந்த பொறுப்பில் அளித்த ரூ.5 கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந் தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.5 கோடியே 11 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2 லட்சம் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

## ராகுல் மீது குற்றச்சாட்டு சொல்லும் மோடி பேச்சு: அரசியல் மோசடி: செல்வப்பெருந்தகை

சென்னை, நவ.13

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

அரசமைப்புச் சட்டம் உறுதி செய்திருக்கிற சமூக நீதியை அனைவருக்கும் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான்சாதிவாரிகணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தலைவர் ராகுல்காந்தி தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். அனைத்து மக்களையும் உள்ளடக்கி, உரிய பிரதிநிதித்துவத்தை நோக்கமாக கொண்டது தான் சாதிவாரி கணக்கெடுப்பு.

கடந்த 2021ம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய மக்கள் தொகை



கணக்கெடுப்பை நடத்தாமல் காலம் தாழ்த்தி வருகிற மோடி அரசு உடனடியாக

அதனை நடத்துவதோடு, அதனுடன் சாதி வாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டுமென்பது தான் தலைவர் ராகுல்காந்தியின் முக்கியமான கோரிக்கையாகும்.

அதனை எதிர்கொள்ள முடியாத பிரதமர் மோடி, பின்தங்கிய சாதியினரிடையே மோதலை உருவாக்க ராகுல்காந்தி முயற்சிக்கிறார் என்ற குற்றச்சாட்டை கூறுகிறார். மதரீதியாக மக்களை பிளவுபடுத்துகிற பா.ஜ.க.வின் அரசியலை எதிர்த்து தான் தேசிய ஒற்றுமை பயணத்தின் மூலம் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக 10,000 கி.மீ. தூரம் நடைபயணம் மேற்கொண்டு தம்மை வருத்திக் கொண்ட தலைவர் ராகுல்காந்தியை பார்த்து, மக்களை பிளவுபடுத்துகிறார் என்று குற்றச்சாட்டு கூறுவதை விட ஒரு அரசியல் மோசடி வேறு எதுவும் இருக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## யாருடைய ஆட்சியில் சிறந்த திட்டங்கள்? எடப்பாடி பழனிசாமிக்கு உதயநிதி சவால்

விருதுநகர், நவ.13

விருதுநகரில் நடந்த அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்து பேசியிருந்தார்.

அ.தி.மு.க. ஆட்சியில் எதையுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இதற்கு திருச்சியில் பதில் அளித்திருந்த எடப்பாடி பழனிசாமி 2011ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை 10 ஆண்டு காலம் சிறந்த ஆட்சியை அ.தி.மு.க. தந்ததாக கூறி இருந்தார்.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது நிறைய திட்டங்களை கொண்டு வந்து அதனால் மக்கள் பயன் பெற்றதாகவும், ஜெயலலிதா மறைவுக்கு பிறகு நான் பொறுப்பேற்று 4 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்ததாகவும் கூறினார்.

நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் என்னென்ன சாதனை செய்தேன் என துண்டு சீட்டு இல்லாமல் சொல்வேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எந்தெந்த திட்டங்களை கொண்டு வந்தார் என கூற முடியுமா?

நீங்கள் போடுகிற மேடைக்கே நான் வருகிறேன். பகிரங்கமாக மக்களிடம் சொல்வோம். மக்கள் தீர்ப்பு கொடுக்கட்டும். அதற்கு நான் தயார் என்று மு.க.ஸ்டாலினுக்கு சவால் விட்டார்.

இந்த சவால் குறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடந்த விளையாட்டு நிகழ்ச்சியில் இன்று பங்கேற்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: சென்னைக்கு அருகே விளையாட்டு நகரம் எப்போது அமைக்கப்படும்?

பதில்: 3 மாதத்திற்குள் இது சம்பந்தமான ரிப்போர்ட் கிடைக்கும். அதற்கு பிறகு அதற்கான டெண்டர் விடப்படும். நிலப்பிரச்சனை கொஞ்சம் இருந்தது. அதை நிவர்த்தி செய்ய சிறிது கால தாமதம் ஆகி உள்ளது.

கேள்வி: அரசு திட்டங்கள் சம்பந்தமாக நேரடி விவாதத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தயாரா? என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஒரு கேள்வி எழுப்பி இருக்கிறாரே? அரசின் சார்பில் யாராவது பங்கேற்பார்களா?

பதில்: என்னைக் கூப்பிட்டால் நான்போவேன். நான்விவாதத்துக்கு செல்ல தயார்.

கேள்வி: அரசு திட்டங்களுக்கு தொடர்ந்து கலைஞர் பெயரை சூட்டுவதை எதிர்க்கட்சி தலைவர் விமர்சித்துள்ளாரே?

பதில்: பின்னே யார் பெயரை வைக்க வேண்டும்? யார் பெயரை வைக்கலாம்?

கேள்வி: இ.பி.எஸ். விமர்சிக்கிறாரே? எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்: விமர்சனம் வரத்தானே செய்யும். யார் பெயரை வைக்க வேண்டுமோ அதைத்தான் வைப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் தங்கி பயிலும் அனைத்து மாணவமாணவிகளுக்கு அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் தொகுப்பான 'சாம்பியன்ஸ் கிட்' உதவிப் பொருட்களை 553 மாணவமாணவிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

அதைத்தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் ராணிப்பேட்டை மாவட்டத்தில் ரூ.15 கோடியில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணிக்கும், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.6 கோடியில் ஒலிம்பிக் அகாடமி கட்டிடம் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் பேசியதாவது:

இந்த அறக்கட்டளை மூலமாக இதுவரை 600 க்கும் அதிகமான வீரர் வீராங்கனைகளுக்கு வருவாய் 14 கோடி அளவிற்கு நிதி உதவிகள் வழங்கியுள்ளோம். நீங்கள் TNchampions.sdat.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்தால் உங்களுடைய திறமைக்கும் தேவைக்கும் ஏற்ப நிச்சயம் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நிதி உதவிகள் வழங்கப்படும் .

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த இந்த 3 ஆண்டுகளில் 120 வீரர்களுக்கு சுமார் 108 கோடி ரூபாய் அளவில் உயரிய ஊக்க தொகையை நம் முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டை விளையாட்டு துறை தலை நகராக்க வேண்டும் என்கிற லட்சியத்தை உங்களின் துணை இல்லாமல் எட்ட முடியாது. அதை உணர்ந்து அரசு எடுக்கிற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் முழு ஒத்துழைப்பு அளித்து வரும் உங்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் நம் வீரர்கள் பெறுகிற வெற்றி அவர்களுடைய தனிப்பட்ட வெற்றியோ அவர்கள் குடும்பத்திற்கான, ஊருக்கானவெற்றியோ மட்டும் கிடையாது. அது ஒட்டு மொத்த தமிழ்நாட்டிற்கான வெற்றி. உங்களைப் பார்த்து பல்வேறு கிராமங்களில் இருந்து இன்னும் நிறைய விளையாட்டு வீரர்கள் வருவார்கள். உங்களுக்கு இன்னும் பல திட்டங்களை நம் முதலமைச்சர் தர உள்ளார். உங்களுக்கு தேவையான திட்டங்களை நான் நிச்சயம் பெற்று தருவேன். இவ்வாறு அவர் பேசினார்.

## திருப்பூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



திருப்பூர், நவ.13

மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 482 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் தாட்கோ சார்பில் தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் இயற்கை மரணம் அடைந்த 02 தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதார்களுக்கு தலா ரூ.25,000/ வீதம் ரூ.50,000/க்கான காசோலைகளை மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெயராமன், திட்ட இயக்குநர் (மகளிர்த்திட்டம்) சாம்சாந்தகுமார், தனித் துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) குமாரராஜா, மாவட்ட மேலாளர் (தாட்கோ) ரஞ்சித்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நலஅலுவலர் புஷ்பாதேவி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வீடு விற்பது தொடர்பான பிரச்சினை: இளம்பெண்ணை அடித்துக்கொன்ற வாலிபர் கைது





பேரளம், நவ.13

திருவாரூர் மாவட்டம், பேரளம் அடுத்துள்ள கீரனூர் அக்கரைதோப்பு தெருவை சேர்ந்தவர் ராமமூர்த்தி. இவரது மனைவி தேவி (வயது 45). இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ராமமூர்த்தி இறந்து விட்டார்.

இதனால் தேவி, அவரது மகள்கள் மற்றும் ராமமூர்த்தியின் தகப்பனார் ஆகியோர் வசித்து வந்துள்ளனர். இவரது மூத்த மகளுக்கு திருமணமாகி வெளியூர் சென்றுள்ளார்.

இந்நிலையில் அதே பகுதியை சேர்ந்த பக்கிரி ராஜா (35) என்பவருக்கு வீட்டை விற்பதாக கூறி தேவி பணம் பெற்றுள்ளதாக தெரிகிறது. இதனால் வீட்டை காலி செய்யும்படி பக்கிரி ராஜா தேவியிடம் கேட்டுள்ளார்.

அதோடு மட்டுமின்றி, பக்கிரி ராஜா நேற்று நள்ளிரவு தேவி வீட்டிற்கு சென்று, வீட்டை தனது பெயருக்கு பதிவு செய்து தரும்படி முறையிட்டுள்ளார். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரமடைந்த பக்கிரி ராஜா அருகில் இருந்த உலக்கையை எடுத்து தேவியை சரமாரியாக தாக்கி உள்ளார். இதில் தேவியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வீட்டில் வந்து பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பின்னர், இதுகுறித்து பேரளம் போலீசில் தகவல் தெரிவித்தனர். அதன் அடிப்படையில், போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தேவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பக்கிரி ராஜாவை கைது செய்தனர்.

நள்ளிரவு பெண்ணை உலக்கையால் தலையில் அடித்துக் கொலை செய்த சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பள்ளிகளுக்கு வராத ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை: தொடக்கக் கல்வி இயக்குநர் உத்தரவு

சென்னை, நவ.13

தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவுறுத்தலின்பேரில், மாநிலம் முழுவதும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முதன்மை, மாவட்ட, வட்டாரக்கல்வி அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர். அப்போது, பள்ளிகளுக்கு முறையாக வராத ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அந்த வகையில், தருமபுரி அரூர் கல்வி மாவட்டத்துக்குட்பட்ட ராமியாம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் பாலாஜி பணிக்கு வராமல், மாற்று நபரை வகுப்பு எடுக்க அனுப்பியது ஆய்வில் தெரியவந்தது. இதையடுத்து ஆசிரியர் பாலாஜி இடைநீக்கம் செய்யப்பட்டார். அதற்கு உறுதுணையாக இருந்த தலைமையாசிரியை நாகலட்சுமி, வேறு பள்ளிக்கு இடமாறுதல் செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தையடுத்து பள்ளிக்கு முறையாகவராத ஆசிரியர்களை கண்டறிந்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தொடக்கக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலனை காக்க வேண்டியது நமது பொறுப்பாகும். அதன்படி, பள்ளியில் ஆய்வு செய்யும் போது ஆசிரியர்கள் பணிக்கு வராமல் வேறுநபர் மூலம் பாடம் நடத்துவது கண்டறியப்பட்டாலோ அல்லது அதுதொடர்பான புகார்கள் பெறப்பட்டாலோ அதன் மீது தனிக்கவனம் செலுத்தி விசாரணை நடத்த வேண்டும்.

அந்த விசாரணையில் உண்மை இருப்பின் மாவட்டக் கல்வி அலுவலரே ஒழுங்குநடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும், பள்ளியில் இத்தகைய தவறுகள் நிகழும் போது அதன் விவரத்தை உயர் அதிகாரிகளுக்கு வழங்க தவறும்பட்சத்தில் தலைமையாசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள்மீதும்துறை சார்ந்து கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கள்ளக்காதலனுடன் வீட்டை பூட்டிய மக்கள் அவமானத்தில் இளம்பெண் தற்கொலை

சின்னமனூர், நவ.13

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள அய்யம்பட்டி ரேசன் கடை தெருவைச் சேர்ந்தவர் கருப்பையா (வயது 30). இவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த அவனிகா (21) என்பவருக்கும் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

இவர்களது வீட்டுக்கு எதிரில் வசிக்கும் ராம்குமார் (24) என்பவருக்கும் அவனிகாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு வந்தது. ராம்குமார் மற்றும் கருப்பையா இருவரும் நண்பர்கள் என்பதால் இந்த பழக்கம் வெளியில் தெரியவில்லை. அதன் பின்னர் கணவர் வீட்டை விட்டு சென்ற போது ராம்குமார் சென்று வந்ததால் அக்கம் பக்கத்தினர் சந்தேகமடைந்தனர்.

பின்னர் இவர்களது பழக்கம் குறித்து கணவர் கருப்பையாவுக்கும் தெரியவரவே அவர் இருவரையும் கண்டித்துள்ளார். இருந்த போதும் அவர்கள் தொடர்ந்து பழகி வந்துள்ளனர்.

நேற்று மாலை வீட்டில் அவனிகா மட்டும் தனியாக இருந்துள்ளார். அந்த சமயத்தில் ராம்குமார் வீட்டுக்குள் புகுந்தார். இதைப் பார்த்ததும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வெளிப்புறமாக கதவை பூட்டி விட்டனர்.

இதனை அறிந்த ராம்குமார் மற்றும் அவனிகா அதிர்ச்சியடைந்தனர். பின்னர் ராம்குமார் சத்தம் போட்டுதான் இனிமேல் இது போல் நடந்து கொள்ளமாட்டேன் என தெரிவிக்கவே பொதுமக்கள் கதவை திறந்து விட்டனர்.

அவர் சென்ற பிறகு வீட்டில் தனியாக இருந்த அவனிகா தனது கள்ளத்தொடர்பு ஊர் மக்கள் அனைவருக்கும் தெரிந்து விட்டதே என வேதனையடைந்தார். இந்த அவமானத்தால் தனது அறையில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து சின்னமனூர் போலீசாருக்கு அவரது தாயார் நவநீதா புகார் அளித்தார்.

அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து அவரது உடலை மீட்டு தேனி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

# பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ரூ.14.65 லட்சம் கல்வி உதவி தொகை வழங்கிய விஜய் வசந்த் எம்.பி






சென்னை, நவ.13

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தனது சொந்த செலவில் ரூ.14.65 லட்சம் கல்வி உதவி தொகையை கன்னியாகுமரி மாவட்ட காங்கிரஸ் எம்.பி விஜய் வசந்த் வழங்கியுள்ளார்.

இதுகுறித்து விஜய் வசந்த் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

இந்த கல்வி ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஏழை எளிய மாணவர்களின் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பிற்கு சொந்த செலவில் ரூ. 14.65 லட்சம் வழங்கியுள்ளேன்.

நிதி இல்லாத காரணத்தால் எந்த மாணவரும் தங்கள் கல்வி பயணத்தை பாதியில் நிறுத்தி விட கூடாது என எனது தந்தை மறைந்த வசந்த குமார் அவர்கள் உறுதியுடன் இருந்தார்.

இதற்காக அவர் ஏழை மாணவர்களின் கல்வி செலவிற்காக ஏராளமான உதவிகள் செய்து வந்தார். அவரது மறைவிற்கு பின் அவர் வழியில் எல்லா வருடமும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவிகள் செய்து வருகிறேன்.

இந்த வருடமும் 2024 25 கல்வி ஆண்டில் கல்வி நிதி உதவி வழங்குவதற்கு தகுதியான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பெற்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

அதன் அடிப்படையில் அவர்களின் தகுதியை ஆராய்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நேரடியாக காசோலை வழங்கப்பட்டது. இந்தியாவின் பிரகாசமான எதிர்காலம் இளைஞர்களின் கரங்களில் உள்ளது. அந்த இளைஞர்களுக்கு சிறந்த கல்வி செல்வதை அளிக்க வேண்டியது நம் அனைவரது கடமை.

எனது தரப்பில் இருந்து என்னால் இயன்ற வரையில் அதை தொடர்ந்து செய்வேன் என உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட காங்கிரஸ் எம்.பி விஜய் வசந்த், அகஸ்தீஸ்வரம் பகுதி பெற்றோர் மற்றும் மக்களின் கோரிக்கையை ஏற்று அங்கு ஒரு அங்கன்வாடி அமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியிலிருந்து ரூபாய் 14. 5 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஏஜென்டுகளுக்கு உடனடியாக கிடைக்கிறது: தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்வதில் சிக்கல் பொதுமக்கள் அதிருப்தி

சென்னை, நவ.13

ஐ.ஆர்.சி.டி.சி. இணைய தளம் மூலம் தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

விரைவான மற்றும் பாதுகாப்பான பயணங்களுக்கு பொதுமக்கள் எப்போதும் நாடுவது ரெயில் பயணங்களையே. இதனால் முக்கிய ரெயில்களில் காத்திருப்போர் வரிசை அதிகமாக இருக்கும். அதிலும் குறிப்பாக, திட்டமிடாத திடீர் பயணங்களுக்கு டிக்கெட் பொதுமக்கள் அதிகம் நாடுவது தட்கல் டிக்கெட்டுகளையே. இதன்மூலம் முன்கூட்டியே பயணத்தை திட்டமிடாதவர்களும் பாதுகாப்பான ரெயில் பயணத்தை மேற்கொள்ளலாம். டிக்கெட் கவுன்டர்கள் மட்டுமல்லாமல், ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மூலமும் அதிகளவில் தட்கல் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலையில், மொத்த ரெயில் டிக்கெட்டுகளில் 80 சதவீதம் ஆன்லைன் மூலமே பெறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மூலம் தட்கல் டிக்கெட்டுகள் பதிவு செய்வதில் பயணிகள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

இதுகுறித்து மதுரையைச் சேர்ந்த ரெயில் பயணி ஒருவர் கூறுகையில், ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் எனது பெயர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை ஆதார் மூலம் இணைத்து பதிவு செய்துள்ளேன். டிக்கெட் எடுக்கும் நேரத்தில் கால நேர விரயம் ஏற்படுவதை தடுக்க ஆர்வாலட் மூலம் இணையதளத்தில் தட்கல் டிக்கெட் எடுக்க முயன்றும், பணம் செலுத்திய சிறிது நேரம், இணையதளம் முடங்கி, பின்னர் 5 நிமிடங்கள் கழித்து நேரம் முடிவடைந்து விட்டது என்றோ அல்லது கேப்சாசரியாக பதிவேற்றப்படவில்லை என்றோ தகவல் வருகிறது.

கடந்த ஏப்ரல், மே மாதங்கள் வரை எனக்கு இந்த பிரச்சினை இல்லை.

கடந்த சில மாதங்களாகவே இந்த பிரச்சினையை சந்திக்கிறேன். காலை 10 மணிக்கு தொடங்கும் ஏ.சி. வகுப்பு டிக்கெட்டுகள் எடுப்பதில் எந்த பிரச்சினையும்எழவில்லை. ஆனால் ஏ.சி. அல்லாத டிக்கெட் எடுக்கும் போது மட்டுமே பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரிவித்தார்.

இதே போல் மற்றொரு ரெயில் பயணி கூறுகையில், நான் மதுரையிலிருந்து அடிக்கடி தொழில் விஷயமாக வடமாநிலங்களுக்கு செல்வது வழக்கம். இந்நிலையில், அவசர பயணங்களுக்காக, மொபைல் ஆப் மூலம் தட்கல் ரெயில் டிக்கெட் புக் செய்யும் போது, இணையதளம் முடங்கி விடுகிறது. நான் அதிக வேகமுடைய இன்டர்நெட்டை பயன்படுத்தி டிக்கெட் எடுக்க முயன்றாலும் என்னால் டிக்கெட் எடுக்க முடியவில்லை. ஆனால் இது போன்ற நேரங்களில் ரெயில் டிக்கெட் ஏஜென்டுகள் மட்டும் டிக்கெட் முன்பதிவுசெய்துவிடுகிறார்கள்.

இது எப்படி என்று தெரியவில்லை. என அதிருப்தி தெரிவித்தார்.

அதிகளவில் பயணிகள் டிக்கெட் பெறுவதால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மேம்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் சாதாரண பயணிகள் இணையதளம் மூலமாக தட்கல் உள்ளிட்ட ரெயில் டிக்கெட்டுகளை பெறுவதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு ரெயில் நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# குடிபோதையில் தகராறு: மனைவி தூக்கில் தொங்கியதை பார்த்து கணவரும் தற்கொலை

தஞ்சாவூர், நவ.13

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தாலுகா வேப்பன்குளம் தெற்கு தெருவை சேர்ந்தவர் சரத்குமார் (வயது 34). லாரி டிரைவர். இவரது மனைவி மோகனசுந்தரி (27).

இவர்களுக்கு கடந்த ஒன்றறை ஆண்டுகளுக்கு முன்பு பெற்றோர் சம்மதத்துடன் காதல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு கணவன் மனைவி இருவரும் தஞ்சை மாரியம்மன்கோவில் காமாட்சியம்மன் நகரில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகைக்காக சரத்குமார் தனது மாமியார் வீடான திருவாரூர் மாவட்டம் நெப்புகோவில் பகுதிக்கு மனைவியுடன் சென்று ஒரு வாரம் தங்கினார். விருந்து முடிந்த பின்னர் இருவரும் தஞ்சையில் உள்ள வீட்டிற்கு வந்து விட்டனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் சரத்குமார் குடிபோதையில் வீட்டிற்கு வந்துள்ளார். இதனை மோகனசுந்தரி தட்டி கேட்டார். இதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. பின்னர் அன்றைய தினம் இரவில் இருவரும் வீட்டில் தூங்கினர்.

இந்த நிலையில் மனவேதனையில் இருந்த மோகனசுந்தரி நேற்று மின்விசிறியில் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். காலையில் எழுந்த சரத்குமார் மோகனசுந்தரி பிணமாக தொங்கியதை பார்த்து கதறி அழுதார். பின்னர் சரத்குமாரும் அதே சேலையில் மின்விசிறியில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது பற்றி தாலுகா போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சரத்குமார், மோகனசுந்தரி உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இது பற்றிய புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் திருமணமாகி ஒன்றறை ஆண்டுகளே ஆனதால் ஆர்.டி.ஓ.வும் விசாரணை நடத்தி வருகிறார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தீபாவளி கொண்டாட ஊருக்குச் சென்ற வடமாநில தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிப்பு

ஈரோடு, நவ.13

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பணிகளில் பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக கட்டுமான பணிகளில் வடமாநில தொழிலாளர்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். இதைப்போல் அரசு திட்டப்பணிகளிலும் வட மாநில தொழிலாளர்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஈரோடு மாநகராட்சியில் பெரும்பள்ளம் ஓடை விரிவாக்கம், சோலாரில் புதிய பஸ் நிலையம் அமைக்கும் பணி, ஈரோடு மத்திய பஸ் நிலையத்தில் புதிய வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு திட்ட பணிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தீபாவளியை கொண்டாட சொந்த ஊருக்கு சென்றனர். தீபாவளி முடிந்து கிட்டத்தட்ட 10 நாட்கள் கடந்தும் ஈரோட்டுக்கு திரும்பி வரவில்லை. இதனால் மாநகராட்சியில் நடந்து வரும் கட்டுமான பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: மாநகராட்சியில் நடந்து வரும் கட்டுமான பணிகளில் வட மாநில தொழிலாளர்கள் அதிக அளவில் ஈடுபட்டு வந்தனர். இதில் பெரும்பாலானோர் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஓட்டு போடுவதற்காக சென்ற நிலையில் பலர் தற்போது வரை திரும்பவில்லை. இதைப் போல் தீபாவளியை முன்னிட்டு சொந்த ஊருக்கு சென்ற வட மாநில தொழிலாளர்களும் இதுவரை திரும்பி வரவில்லை.

ஈரோட்டில் அவர்களுக்கு கிடைக்கும் சம்பளத்தை போலவே அவர்களது சொந்த மாநிலத்திலும் வழங்க அம்மாநில அரசுகள் முன்வந்துள்ளதாக தெரிகிறது. இதனால் பெரும்பாலான தொழிலாளர்கள் சொந்த மாநிலத்திலேயே பணிபுரிய முடிவு எடுத்துள்ளனர். எனவே சொந்த ஊருக்கு சென்ற வட மாநில தொழிலாளர்களுக்கு பதிலாக புதிய தொழிலாளர்கள் பணிக்கு அழைத்து வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவ ர்கள் கூறினர்.

இதுகுறித்து, ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் ராஜமாணிக்கம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குறிப்பாக பெருந்துறையில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் சொந்த ஊருக்கு சென்ற பெரும்பாலானோர் ஈரோடு திரும்பி வரவில்லை.

இதற்கான காரணம் மத்திய அரசின் சிறப்பு திட்டங்களால் பீகார், ஒடிசா, மத்திய பிரதேசம், ஜார்கண்ட் என அந்தந்த மாநிலங்களிலேயே தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கப்ப ட்டுள்ளது. இதனால் பெரு ம்பாலான தொழிலாளர்கள் தங்களின் சொந்த மாநில த்திலேயே பணிபுரிய முடி வெடுத்துள்ளனர். தமிழக த்தின் தொழில் வளர்ச்சியில் இது பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

எனவே மத்திய, மாநில அரசுகள் இந்த விவகாரத்தில் உரிய கவனம் செலுத்தி தமி ழகத்தில் தொழில் வள ர்ச்சியை மேலும் ஊக்குவிக்க வேண்டும். தற்போது ஈரோடு மாவட்டத்தில் வட மாநில தொழிலாளர்கள் பெரும்பாலானோர் திரும்பி வராததால் திட்டப் பணி களில் சுணக்கம் ஏற்பட்டு ள்ளது. இதைப்போல் தொழிற்சாலைகளிலும் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வட மாநில தொழிலாளர்களுக்கு சாதகமான சலுகைகளை தமிழக அரசு வழங்கினால் அவர்கள் தமிழகத்திற்கு வர வாய்ப்பு அதிகம் உள்ளது. அத்துடன் தொழில்துறை வளர்ச்சிக்கு தமிழக அரசு சாதகமான அறிவிப்பு களை வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஒரே நேரத்தில் விண்ணப்பிப்பதால் முடங்கிய 'விஜய் கட்சி' செயலி



சென்னை, நவ.13

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் கடந்த பிப்ரவரி மாதம் அரசியல் பயணத்தை தொடங்கினார்.

தொடர்ந்து கட்சி புதிய உறுப்பினர் சேர்க்கை தமிழகம் முழுவதும் தொடங்கியது. கட்சியில் சேர்வதற்கான தனி இணைய தள செயலி உருவாக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வந்தனர்.

இதையொட்டி விஜய் கட்சியில் சேர்வதற்கு தீவிர ஆர்வம் கொண்டு செயலி மூலம் கட்சியில் இணைய தொடங்கினர். ஆர்வ மிகுதியில் ஒரே நேரத்தில் ஏராளமானோர் விண்ணப்பித்ததால் இணைய தள செயலி முடங்கியது.

இதனால் கட்சியில் சேர முடியாமல் பலர் ஏமாற்றம் அடைந்த நிலையில் இணைய தள செயலி சரி செய்யப்பட்டு மீண்டும் கட்சியில் புதிய உறுப்பினர்கள் சேர தொடங்கினர்.

கட்சி தொடங்கிய 1 மாதத்தில் 75 லட்சம் பேர் கட்சியில் புதிதாக இணைந்ததாக தகவல்கள் வெளியானது. அதில் பெரும்பாலானவர்கள் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் உறுப்பினர்களாக சேர்ந்தனர்.

தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு கடந்த மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டி வி.சாலையில் நடந்தது.

மாநாட்டில் தமிழக அரசியல் மற்றும் கட்சியின் அடுத்தடுத்த திட்டங்கள், கொள்கைகளை விளக்கி அதிரடியாக விஜய் பேசினார்.

லட்சக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த மாநாடு அரசியல் வட்டாரத்தை பரபரப்படைய செய்தது. அரசியல் கட்சிகள் மட்டுமின்றி பொது மக்களையும் விஜய் கட்சி மாநாடு உற்று நோக்க வைத்தது.

மாநாட்டை தொடர்ந்து விஜய் கட்சியில் புதிதாக சேருவோரின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியது.

ஒரே நேரத்தில் செயலி மூலம் இணைய தளத்தில் ஏராளமானோர் விண்ணப்பிக்க தொடங்கினர். இதனால் இணைய தள 'செயலி'யின் சர்வர் தற்போது முடங்கியது. சர்வர் கோளாறால் கட்சியில் சேர முடியாமல் ஏராளமானோர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுபற்றி தமிழக வெற்றிக்கழக நிர்வாகி ஒருவர் கூறியதாவது:

சர்வர் முடக்கம் இன்னும் சில தினங்களில் சரியாகும். கட்சியில் சேரும் புதிய உறுப்பினர்கள் விவரங்களை சேகரித்து வருகிறோம். சிறப்பு செயலி சரியானதும் மீண்டும் உறுப்பினர் சேர்க்கை பணிகள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கலைஞர் சிலைகள் உடைக்கப்படும்: சீமான் ஆவேசம்



நாகை, நவ.13

நாகையில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ ஆந்திராவில் ராஜசேகர் ரெட்டி சிலைகளுக்கு ஏற்பட்ட நிலை உங்களுக்கும் ஏற்படும்.

★ வங்கதேச தந்தையின் சிலைகளே அந்நாட்டில் உடைக்கப்பட்டன. அதிகாரம் என்பது நிலையானது அல்ல.

★ தமிழ் மகன் ஒருவன் ஆட்சிக்கு வரும்போது அனைத்தும் பொட்டலாகி விடும்.

★ திருடுவதற்கும் திருடுபவன்பாதுகாப்பாக இருப்பதற்கும் தான் திராவிடம்.

★ அதிமுக தொடங்கிய திட்டங்களை முடித்து வைக்கும் திமுக அதற்கு கலைஞர் பெயரை சூட்டுகிறது. ★ கொலைகாரனும் செத்து விழுந்தவனும் ஒன்றா?

★ தவெகவில் இருந்து பலர் எனது கட்சியில் இணைகின்றனர் என்று அவர் கூறினார்.

# மாவட்ட செயலாளர்கள் குறித்த அறிக்கையை டிச.7ந்தேதிக்குள் தாக்கல் செய்க கள ஆய்வு குழுவிற்கு இபிஎஸ் உத்தரவு



சென்னை, நவ.13

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் கள ஆய்வு குழுவுடனான ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. ஆலோசனைக்குப்பின்னர் அவர் கூறியதாவது:

★ மாவட்ட செயலாளர்கள் மீது தவறு இருந்தால் கூட, அதனை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும்.

★ மாவட்ட செயலாளர்கள் மீது தவறு இருந்தால் ஆய்வு அறிக்கையை வைத்து அப்பகுதியில் நிர்வாகிகள் மாற்றப்படுவார்கள்.

★ அதிமுக கள ஆய்வு குழுவினர் அளிக்கும் அறிக்கை அடிப்படையிலேயே புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

★ 2026 சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முதலில் கட்சியில் களப்பணி ஆற்ற வேண்டும்.

★ அதிமுகவில் அமைக்கப்பட்ட கள ஆய்வு குழு டிச.7ந்தேதிக்குள் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

★ மாவட்டந்தோறும் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

★ பாரபட்சம் பார்க்காது அனைத்து நிர்வாகிகளையும் சந்தித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சி பணி குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

★ அதிமுக கிளை, வார்டு, வட்ட கழகங்கள் மற்றும் சார்பு அமைப்புகளின் பணிகள், செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது.

# இபிஎஸ் உடன் விவாதிக்க தயார் துணை முதலமைச்சர்




சென்னை, நவ.13

கருணாநிதி பெயரில் அவசியமற்ற பணிகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. சென்னை கடலின் நடுவே கலைஞர் பேனா சிலை அமைப்பதற்கு நிதி ஒதுக்க முனைப்பு காட்டப்படுகிறது. மேலும், சென்னை முட்டுக்காட்டில் ஐந்து லட்சம் சதுர அடியில், 487 கோடி ரூபாய் செலவில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைப்பதற்கு இந்த திராவிட மாடல் அரசு டெண்டர் கோரியுள்ளது. பல ஆண்டுகளாக தமிழக விவசாயிகள் நதிநீர் இணைப்புக்காக பல போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில், திராவிட மாடல் அரசு அதில் கவனம் செலுத்தாமல் பன்னாட்டு அரங்கம் கட்டுவதற்கு முனைப்பு காட்டுவதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ எடப்பாடி பழனிசாமி என்னை விவாதத்திற்கு அழைத்தால் செல்ல தயார்.

★ அரசு திட்டங்கள் தொடர்பாக நேரடி விவாதத்திற்கு என்னை அழைத்தால் நான் செல்வேன்.

★ அரசின் திட்டங்களுக்கு பெயர் வைப்பது தொடர்பாக விமர்சனம் எழத்தான் செய்யும்.

★ திட்டங்களுக்கு யார் பெயரை வைக்க வேண்டுமோ அதைத்தான் வைக்க வேண்டும்.

அரசின் திட்டங்கள் குறித்து நேரடி விவாதம் நடத்த முதலமைச்சர் வருவாரா என இபிஎஸ் கேள்வி எழுப்பிய நிலையில் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

# கண் நோய் பரவல் விழிப்புணர்வு: தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்



சென்னை, நவ.13

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொதுவாக, காலநிலை மாறுபடும்போது கண் நோய்கள் ஏற்படுவது வழக்கம். அந்த வகையில், தற்போது விழி வெண்படல அழற்சி காரணமாக கண்கள் சிவப்பாதல், கண்களில் நீர் வடிதல், கண்கள் ஒட்டிக் கொள்ளுதல், கண் கூசுதல் போன்றவை ஏற்பட்டு, கண் மருத்துவமனைகளை நாடுவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவதாகவும், பள்ளிகளில் சிறுவர், சிறுமியர் அருகருகில் அமர்ந்து கொள்வதன் காரணமாக அவர்களுக்கு இது விரைவாக பரவுவதாகவும், இதற்கு முக்கியக் காரணமாக விளங்குவது பாக்டீரியா அல்லது வைரஸ் என்றும், கண்களிலிருந்து வெளியேறும் கசிவுகள் மூலம் இது பரவுவதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, கண் நோய் பரவல் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தவும், கண் நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், அதற்கான மருந்துகளை போதிய அளவில் இருப்பில் வைத்துக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கையினை உடனடியாக எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சென்னை விமான நிலையத்தில் 20 கிலோ தங்கம் பறிமுதல்

சென்னை, நவ.13

சென்னைவிமானநிலையம் தங்கம் கடத்தல் மையமாக திகழ்ந்து வருகிறது. வெளிநாடுகளில் இருந்து தங்கம் கடத்தி வருபவர்களை சுங்கத்துறையினர் பிடித்து பறிமுதல் செய்தாலும் அதனை விட பலமடங்கு கடத்தல் தங்கம் வெளியில் கொண்டு செல்லப்படுவதாக கூறப்படுகிறது. இதனால் சென்னை விமான நிலையத்தில் தங்கம் கடத்தல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில் ஒரே நாளில் ரூ.15 கோடி மதிப்புள்ள 20 கிலோ கடத்தல் தங்கம் சென்னை விமான நிலையத்தில் பிடிபட்டு உள்ள சம்பவம் அதிகாரிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது பற்றிய விபரம் வருமாறு:

சிங்கப்பூரில் இருந்து சென்னைக்கு வரும் விமானங்களில் பெருமளவு தங்கம் கடத்தி வரப்படுவதாக சென்னையில் உள்ள மத்திய வருவாய் புலனாய்வு துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து மத்திய வருவாய் புலனாய்வு துறை தனிப்படையினர் நேற்று இரவு சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து ரகசியமாக கண்காணிப்பில் ஈடுபட்டனர். இரவு 11 மணியளவில் சிங்கப்பூரில் இருந்து ஸ்கூட் ஏர் லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னை விமான நிலையத்திற்கு வந்தது. அந்த விமானத்தில் வந்த பயணிகளில் சந்தேகப்படும்படியாக வந்த அனைவரையும் மத்திய வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகள் நிறுத்தி தீவிர விசாரணை நடத்தினர்.

இதேபோல் நள்ளிரவில் சிங்கப்பூரில் இருந்து வந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் இன்று அதிகாலை சிங்கப்பூரில் இருந்து வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான பயணிகளிடமும் அதிரடி சோதனை மற்றும் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த சோதனையில் 3 விமானங்களில் வந்த 25 பயணிகளின் உடைமைகளில் தங்கக் கட்டிகள், தங்க பசைகள், மற்றும் தங்க செயின்கள் மறைத்து வைத்து கடத்தி வந்திருப்பது தெரிந்தது. அவர்களிடம் இருந்து மொத்தம் ரூ. 15 கோடி மதிப்புள்ள சுமார் 20 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவர்களிடம்நடத்திய விசாரணையில் சென்னையில் உள்ள முக்கிய தங்கம் கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் இவர்களை சிங்கப்பூருக்கு குருவிகளாக அனுப்பி வைத்திருந்தது தெரிந்தது. ஒரே விமானத்தில் வந்தால் சுங்கச் சோதனையில் மொத்தமாக சிக்கி விடக்கூடாது என்பதற்காக வெவ்வேறு 3 விமானங்களில் வந்ததாகவும் தெரிவித்தனர். தங்கம் கடத்தலில் குருவிகளாக சென்று பிடிபட்டு உள்ள 25 பேரிடமும் தங்கத்துடன் வெளியே சென்றால் யாரை சந்திப்பார்கள்? எங்கு செல்வார்கள் உள்ளிட்ட விபரங்களை சேகரித்து வருகின்றனர். எனவே சென்னையில் தங்கம் கடத்தலில் மூளையாக செயல்படும் கும்பல் விரைவில் பிடிபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை விமான நிலையத்தில் 2 மாதங்களில் ரூ.167 கோடி மதிப்புடைய 267 கிலோ தங்கம் கடத்தடப்பட்ட சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக விமான நிலையத்தில் பரிசு பொருட்கள் விற்பனை கடை நடத்தி வந்த பிரபல யூடியூபர் மற்றும் கடை ஊழியர்கள் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6 ஆயிரம் கனஅடியாக சரிவு



ஒகேனக்கல், நவ.13

கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது.

மேலும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசிமணல் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்து ள்ளது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 6500 கனஅடி தண்ணீர் வந்தது.

இந்த நிலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் நீர்வரத்து படிபடியாக குறைய தொடங்கியது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# உணவு பரிமாறாமல் செல்போனில் மூழ்கிய மனைவி படுகொலை தொழிலாளி வெறிச்செயல்



பெங்களூரு, நவ.13

கர்நாடக மாநிலம் சிவமொக்கா மாவட்டம் சிகாரிப்புரா தாலுகாவை அடுத்த அம்பிளிகொளா பகுதியை சேர்ந்தவர் மனு. இவரது மனைவி கவுரம்மா(வயது 28). கவுரம்மா சிகாரிப்புராவில் உள்ள தனியார் ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். மனு அப்பகுதியில் கூலி வேலை செய்து வந்தார். இந்தநிலையில், நேற்றுமுன்தினம்மாலை மனு வேலை முடிந்து வீட்டுக்கு வந்தார். பின்னர் அவர் மனைவியிடம் உணவு பரிமாறும்படி கேட்டுள்ளார்.

ஆனால் கவுரம்மா நீண்ட நேரம் செல்போனில் பேசிக் கொண்டிருந்தார். இதற்கிடையே ஒரு கட்டத்தில் நீங்களே உணவு பரிமாறி சாப்பிட்டு கொள்ளுங்கள் என்று கவுரம்மா கூறியுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த மனு, மனைவி கவுரம்மாவிடம் தகராறில் ஈடுபட்டார்.

மேலும் கடும் கோபமடைந்த மனு, மனைவியின் கழுத்தை நெரித்து உள்ளார். இதில் கவுரம்மா மூச்சு திணறி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து மனு, மனைவியின் பெற்றோரை தொடர்பு கொண்டு உங்களது மகள் எனக்கு உணவு பரிமாறாமல் செல்போனில் மூழ்கி இருந்தார்.

இதனால் ஆத்திரத்தில் கவுரம்மாவின் கழுத்தை நெரித்து கொலை செய்து விட்டேன் என்று கூறியுள்ளார்.

இதையடுத்து கவுரம்மாவின் பெற்றோர் சிகாரிப்புரா போலீசில் புகார் அளித்தனர்.

அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். இதையடுத்து கவுரம்மாவின் உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து தப்பி ஓடிய மனுவை போலீசார் தேடி வந்தனர்.

இந்தநிலையில் உறவினர் வீட்டில் பதுங்கி இருந்த மனுவை நேற்று போலீசார் கைது செய்தனர். இதுகுறித்து சிகாரிப்புரா போலீசார் வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கட்சி நிகழ்ச்சிக்கு காரில் வரக்கூடாது: ராமதாஸ்



சென்னை, நவ.13

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து நிலை நிர்வாகிகள் கவனத்திற்கு!

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நடத்தப்படும் மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட எந்த நிகழ்ச்சிகளாக இருந்தாலும் அதில் மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் மகிழுந்துகளில் வந்து பங்கேற்கக் கூடாது.

நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்பும் பெண்கள் உள்ளிட்ட பாமகவினரை பேருந்து, மூடுந்துகளில் (வேன்கள்) அழைத்துக் கொண்டு அவர்களுடன் ஒன்றாக பயணித்து வர வேண்டும். இனிவரும் காலங்களில் இந்த அறிவுறுத்தலை அனைவரும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காதல் மனைவி கொலை: பெண்ணை 8 துண்டுகளாக வெட்டி வீசிய கணவன், மாமியார் கைது





திருவண்ணாமலை, நவ.13

திருவண்ணாமலை பேகோபுரம் மெயின் ரோடு பகுதியை சேர்ந்தவர் கோபி (வயது 36). ஆட்டோ டிரைவர். இவருக்கு திருமணமாகி முதல் மனைவி பிரிந்து சென்று விட்டார். இவரது 2வது மனைவி சரண்யா (29). திருவண்ணாமலையில் உள்ள ஒரு கவரிங் நகை கடையில் சரண்யா வேலை செய்த போது. இருவருக்கும் காதல் ஏற்பட்டது. கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு, ஒரு மகளும், 2 மகன்களும் உள்ளனர்.

இந்நிலையில், கடந்த 31ந் தேதி தீபாவளி அன்று கணவன் மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டது. மறுநாள் திடீரென்று சரண்யா மாயமானார். அவரது செல்போனும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மகள் சரண்யாவை பலமுறை செல்போனில் தொடர்பு கொண்டும் பேச முடியாததால், அவரது தாயார் அரசுடையாம்பட்டு கிராமத்தை சேர்ந்த காவேரி திருவண்ணாமலைக்கு நேரில் வந்து விசாரித்தார்.

அப்போது சரண்யா சில நாட்களாக வீட்டுக்கு வரவில்லை என்பது தெரிந்தது. இதனால், அதிர்ச்சி அடைந்த தாய் காவேரி உறவினர் வீடுகள் உள்ளிட்ட பல இடங்களில் தேடினார். ஆனாலும், சரண்யா கிடைக்கவில்லை. இது தொடர்பாக திருவண்ணாமலை டவுன் போலீசில் தனது மகளை காணவில்லை என புகார் அளித்தார்.

மேலும், தனது மருமகன் கோபி மீது சந்தேகம் இருப்பதாக புகாரில் குறிப்பிட்டு இருந்தார். இது தொடர்பாக, திருவண்ணாமலை டவுன் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், கிருஷ்ணகிரி அருகே காட்டுப் பகுதியில் உள்ள சாலை ஓரத்தில் உள்ள சிறிய பாலத்தின் கீழ் இளம் பெண்ணின் சடலம் துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில் கிடந்தது. திருவண்ணாமலை போலீசார் கிருஷ்ணகிரிக்கு சென்றனர்.

அப்போது, அங்கு இறந்து கிடந்தது சரண்யா என்பது தெரியவந்தது. சரண்யாவின் தலை, மார்பு பகுதி மற்றும் ஒரு தொடை ஆகியவை மட்டுமே அங்கு கிடந்தன. அதை கைப்பற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறில் சரண்யாவை கோபி கொலை செய்து வீசியது போலீசாருக்கு தெரியவந்தது. போலீசார் கோபியை கைது செய்தனர். கணவன் மனைவி இடையே சந்தேகத்தால் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

மேலும் கோபி சிலரிடம் கடன் வாங்கியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாகவும் குடும்ப தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட தகராறில் சரண்யாவை கோபி கொலை செய்தார். சரண்யாவின் உடலை 8 துண்டகளாக வெட்டியுள்ளார்.

பின்னர் இது குறித்து அவருடைய தாயார் சிவகாமியிடம் தெரிவித்தார். இருவரும் சேர்ந்து சரண்யாவின் உடல் பாகங்களை ஒரு டிராவல் பையில் வைத்து அடைத்தனர்.

பின்னர் இது குறித்து கோபி தன்னுடைய நண்பர் ராஜேந்திரன் என்பவருக்கு தகவல் தெரிவித்தார். ராஜேந்திரன் அவருக்கு சொந்தமான காரை எடுத்து வந்தார்.

அவருடைய காரில் 3 பேரும் சரண்யாவின் உடல்பாகங்களைபையில் வைத்துக்கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி வனப்பகுதிக்கு சென்றனர்.

8 துண்டுகளாக வெட்டப்பட்ட உடல் பாகங்களை தனித்தனியாக காட்டுப்பகுதியில் வீசி உள்ளனர். தற்போது தலை மார்பு மற்றும் ஒரு தொடை மட்டுமே கிடைத்துள்ளன. மீதி உள்ள கை கால்கள் உள்ளிட்ட 5 பாகங்கள் கிடைக்கவில்லை.

அவற்றை கைப்பற்ற போலீசார் கிருஷ்ணகிரி வனப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கோபியின் தாயார் சிவகாமி மற்றும் டிரைவர் ராஜேந்திரன் ஆகியோரையும் போலீசார் கைது செய்தனர். இந்த பயங்கர கொலை சம்பவம் திருவண்ணாமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தினகனி 13.11.2024

# தமிழகத்தில் கள்ளுக்கடைகளை திறக்க வேண்டும் நாராயணசுவாமி நாயுடுவின் விவசாயிகள் சங்கம் கோரிக்கை



நாமக்கல் நவ 13

நாமக்கல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், தமிழகம் முழுவதும் கள்ளுக்கடைகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து, உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின், தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் நாமக்கல் வேலுசாமி, தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

தமிழக தென்னை விவசாயிகளின் நலன் கருதி, தென்னை மற்றும் பனை மரத்தில் இருந்து இறக்கும் கள்ளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும். இதனை அதனை நடைமுறைப் படுத்த தகுந்த வழிவகை செய்ய, வேண்டும் என ஏற்கனவே சென்னை ஐகோர்ட், தமிழக அரசை அறிவுறுத்தியுள்ளது. தமிழகத்தில், தென்னை மற்றும் பனைசாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதற்காகவும், தமிழக விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை கருத்தில் கொண்டும், கள்ளுக்கு உண்டான தடையை நீக்கி, தமிழகம் முழுவதும் கள்ளுக்கடையை திறக்க வேண்டும் என, தமிழக அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்துள்ளோம். தமிழக விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை உடனடியாக பரிசிலனை செய்து, கள்ளுக்குண்டான தடையை நீக்கி, தமிழகம் முழுவதும், தமிழக அரசு கள்ளுக்கடையை திறந்தால், 50 லட்சத்துக்கம் மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் ஏற்றம் பெறுவதுடன், பல ஆயிரக்கணக்கான தென்னை மற்றும் பனை தொழிலாளார்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பும் கிடைக்கும். தென்னை மற்றும் பனை மரத்தில் இருந்து இறக்கும் கள் உணவில் ஒரு பகுதியாக உள்ளது.

அண்டை மாநிலங்களில் கள்ளுக்கு தடையில்லை. அதனால், மாநில எல்லையில் வசிப்பவர்கள் கள்ளை பருக அண்டை மாநிலங்களுக்கு சென்று வருகின்றனர். தமிழக அரசு, நமது மாநிலத்திலேயே கள்ளுக்கடைகளை திறந்தால், மாநில எல்லையில் வசிக்கும் மக்கள் மட்டும் இன்றி, அனைத்து தரப்பினரும் கள்ளை பருக வாய்ப்பு கிடைக்கும். அதன் மூலம், தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டுவதற்கும் வாய்ப்பாக அமையும். விவசாயிகளின் நலன் கருதி, கள்ளுக்கான தடை உத்தரவை நீக்கி, தமிழகம் முழுவதும் கள்ளுக்கடையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# தஞ்சையில் ராஜராஜ சோழனுக்கு 110 அடி உயரத்தில் சிலை அமைக்க வேண்டும்: ஸ்ரீதர் வாண்டையார் கோரிக்கை




தஞ்சாவூர்,நவ.13

உலகப் புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோவில் கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழன் சதய விழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அப்போது அரசு சார்பில் மட்டும் அல்லாது பல்வேறு அமைப்புகள் சார்பில் ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

அந்த வகையில் இந்த ஆண்டு சதயவிழாவை யொட்டி மூவேந்தர் முன்னேற்ற கழக தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் மாமன்னன் ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் வைபா வாண்டையார், ரவி வாண்டையார், பாலா சுண்டையார், பெரியண்ணன், மூவேந்தர் செல்வராஜ்,என்.ஆர்.வி.சுரேஷ், செல்வப்பாண்டியன், ஆறுமுக நாட்டார், சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.முன்னதாக அவர் அருளானந்தம் நகரில் இருந்து ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் ஊர்வலமாக சோழன் சிலைக்கு வந்தார். பின்னர் தஞ்சை சிட்டி மகால் திருமண மண்டபத்தில் தொண்டர்கள் கூட்டத்தில் ஸ்ரீதர் வாண்டையார் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: மாமன்னன் ராஜராஜ சோழன் சதய விழாவில் ஆண்டுதோறும் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகிறோம். மாமன்னன் ராஜராஜ சோழன் இந்தியாவில் மட்டும் அல்லாது ஆசிய கண்டத்தை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்து சிறப்பாக ஆட்சி செய்தார். அவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் தஞ்சையில் 110 அடி உயரத்தில் மிகப் பிரமாண்டமான ராஜராஜ சோழன் சிலை அமைக்கவேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன். அரசு செய்யாவிட்டால் நானே எனது சொந்த செலவில் 2 ஏக்கர் நிலம் வாங்கி அங்கு மாமன்னன் ராஜராஜ சோழனுக்கு மிகப் பிரமாண்டமான சிலை 110 அடி உயரத்தில் அமைப்பேன். கர்நாடக மாநிலத்தில் பெங்களூர் விமான நிலையத்திற்கு கெம்ப கவுடா பெயர் சூட்டி 108 அடி உயரத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருச்சி விமான நிலையத்திற்கு மாமன்னன் ராஜராஜ சோழன் பெயர் சூட்ட வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை கேட்டுக் கொள்கிறேன். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். வெள்ளம் ஏற்படும் போது தண்ணீர் வீணாகி கடலில் கலக்கிறது. அதைத் தடுக்க கொள்ளிடம் ஆற்றில் தடுப்பு அணைகள் கட்டவேண்டும். விழுப்புரம் முதல் தூத்துக்குடி வரை தொழில் வழித்தடம் அமைக்க வேண்டும். அதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

# கோயம்புத்தூர் குரூப் சார்பில் மாபெரும் இரத்ததானம் தேசிய மாணவர் படை தின விழா



கோவை, நவ.13

தேசிய மாணவர் படை தின விழா முன்னிட்டு மாணவர்கள் இரத்ததானம் தேசிய மாணவர் படை கோயம்புத்தூர் குரூப் சார்பில் மாபெரும் இரத்த தானம் தேசிய மாணவர் படை தின விழாவை முன்னிட்டு கோவை மண்டல தலைமை அலுவலகம், ஒண்டிப்புதூரில் 11.11. 2024 முதல் 22112024 வரையில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடக்க விழாவிற்கு கர்னல். இராமநாதன், கோவை மண்டல தலைமை இராணுவ அதிகாரி, மற்றும் டாக்டர் சரவணபிரியா, கோவை அரசு மருத்துவக்கல்லூரி ஆகியோர் தலைமை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படைதின சிறப்பு மற்றும் இரத்ததனத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்டது. மேஜர் பி. அசோக்குமார், 6(தமிழ்நாடு) மருத்துவ கம்பெனி அதிகாரி முன்னிலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததானம் நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்துகொண்டனர். கோவை, அரசு மருத்துவக்கல்லூரி அலுவலர்கள் உதவியுடன் சுமார் 60 யுனிட்டுக்கும் மேலாக இன்று இரத்தவங்கிக்கு இரத்தம் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 22112024 வரை இந்த இரத்ததானம் நிகழ்வு நடைபெற உள்ளது. 1000க்கும் மேற்பட்ட என்சிசி மாணவர்கள் இரத்தம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு பட்டாலியன் இராணுவ அதிகாரிகள், ஜேசிஓக்கள் இராணுவ அலுவலர்கள், தேசிய மாணவர் படை அலுவலர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'லியோ' படத்தின் சாதனையை முறியடித்த 'அமரன்




ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து தீபாவளி பண்டிகையில் வெளியான படம் 'அமரன்'. ராஜ்கமல் பிலிம்ஸ் இப்படத்தை தயாரித்துள்ள நிலையில் ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். மறைந்த முன்னாள் ராணுவ வீரர் மேஜர் முகுந்தின் வாழ்க்கையைத் தழுவி இப்படம் உருவாகியுள்ளது.இதில்சிவகார்த்திகேயன்மேஜர்முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர்.

உலகளவில் சுமார் 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியானது. தொடர்ந்து, பல்வேறு பிரபலங்களின் பாராட்டுகளை இப்படம் பெற்று வருகிறது. படத்தில் இடம்பெற்ற சண்டை மற்றும் காதல் காட்சிகள் ரசிகர்களைக் கவர்ந்துள்ளன. இந்த நிலையில், உண்மை சம்பவங்களை மையமாக வைத்து எடுக்கப்பட்ட அமரன் திரைப்படம் உலகளவில் ரூ.200 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளது.

இந்த நிலையில் அமரன் படம் வெளியாக இரண்டு வாரங்களை கடந்துள்ள நிலையில் 'புக் மை ஷோ' செயலியில் விஜய்யின் 'லியோ' படத்தை முந்தியுள்ளது. அதாவது 'லியோ' படம் இரண்டாவது வாரத்தில் ஐந்து லட்சத்திற்கும் மேல் 'புக் மை ஷோ' செயலியில் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டது. ஆனால், தற்போது 'அமரன்' படம் இரண்டாவது வாரத்தில் 8 லட்சத்திற்கும் மேல் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வாரத்தில் ஜெயிலர் படம் 10 லட்சத்திற்கும் மேல் டிக்கெட் முன்பதிவு செய்யபட்டு முதல் இடத்தில் உள்ளது. இதன்மூலம் தமிழ் சினிமாவில் முதல் இடங்களில் ஜெயிலர், அமரன், லியோ படங்கள் உள்ளன.

# என்னை ராசி இல்லாத நடிகை என்றனர் நடிகை கீர்த்தி சுரேஷ்



தமிழ், தெலுங்கு, மலையாளபட உலகில்பிரபலநடிகையாக திகழ்ந்து வருபவர் கீர்த்தி சுரேஷ். மலையாள படத்தில் மூலம் சினிமாவில் அறிமுகமானார். பின்னர் 'இது என்ன மாயம்' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். தற்போது இந்தி படத்திலும் நடித்து வருகிறார். மறைந்த நடிகை சாவித்திரியின் வாழ்க்கை கதையான 'நடிகையர் திலகம்' படத்தில் நடித்து தேசிய விருது பெற்றார்.

இந்தநிலையில், சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கீர்த்தி சுரேஷ், "ஒரு மலையாள படத்தில் நடிக்கத்தான் எனக்கு முதல் வாய்ப்புவந்தது.நானும்அம்மாமாதிரிநடிகையாகபோகிறேன் என்ற மகிழ்ச்சியோடு சென்றேன். ஆனால் அந்த படம் நின்று விட்டது. அதன்பிறகு இன்னும் இரண்டு புதிய படங்களில் ஒப்பந்தம்செய்யப்பட்டேன்.அந்தபடங்களும்இடையிலேயே நின்று விட்டன. இதனால் என்னை ராசியில்லாத நடிகை என்று எல்லோரும் சொன்னார்கள். நான் முயற்சியை கைவிடவில்லை. மெல்ல மெல்ல என்னை மெருகேற்றி தொடர்ந்து படங்களில் நடித்து தேசிய விருது பெற்றேன். இப்போது நிறைய நல்ல படங்களில் நடித்து பெயர் வாங்கி இருந்தாலும் ஆரம்ப காலத்தில் எதிர்கொண்ட விமர்சனங்கள் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வந்து வேதனைப்படுத்துகின்றன" என்றார்.

# மணிரத்னம் இயக்கத்தில் 3வது முறையாக நடிக்கும் அபிஷேக் ஐஸ்வர்யா ஜோடி



பிரபல இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகி வரும் படம் 'தக் லைப்'. இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. இப்படத்தில் சிம்பு முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் அடுத்த ஆண்டு ஜூன் 5ந் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் சமீபத்தில் இப்படத்தின் கிளிம்ஸ் வீடியோ ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இதையடுத்து மணிரத்னத்தின்அடுத்தபடத்தில்அபிஷேக்பச்சன்மற்றும்ஐஸ்வர்யா ராய் ஜோடி மீண்டும் இணைந்து நடிக்க இருப்பதாகவும், மணிரத்னம் தயாரித்து இயக்கும் இந்த படம் இந்தியில் உருவாக இருப்பதாகவும் தகவல்வெளியாகியுள்ளது.இந்திதிரையுலகின்நட்சத்திரஜோடியான அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் இருவரும் ஏற்கனவே மணிரத்னம் இயக்கிய 'குரு' மற்றும் `ராவணன்' திரைப்படத்தில் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது இவர்களின் கூட்டணியில் உருவாகும் 3வது படமாக இருக்கும்.

கடந்த 2007ம் ஆண்டு இவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஆராத்யா என்ற பெண் குழந்தை உள்ளது. இவர்கள் இருவரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருவதாக சமூக வலைதளங்களில் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த புதிய படத்தில் இருவரும் இணைந்து நடித்தால் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். விரைவில் இந்த படம் குறித்த அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நியூசிலாந்துக்கு எதிரான தோல்விக்கு பின் எழுந்த விமர்சனங்கள் குறித்து கம்பீர் கருத்து

இந்திய கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பார்டர்கவாஸ்கர் கோப்பையான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22ந் தேதி தொடங்குகிறது. தனது மனைவிக்கு குழந்தை பிறக்க இருப்பதால் கேப்டன் ரோகித் சர்மா முதல் போட்டியில் பங்கேற்க மாட்டார் என்ற தகவல்கள் பரவி வருகின்றன.

இதற்கிடையே, சொந்த மண்ணில் நியூசிலாந்து அணிக்கு எதிரான தோல்வியால் இந்திய அணியையும், பயிற்சியாளர் கவுதம் கம்பீரையும் சமூக வலைதளங்களில் ரசிகர்கள் விமர்சித்து வருகின்றனர். இந்த நிலையில், டெஸ்ட் தொடருக்காக ஆஸ்திரேலியா புறப்படுவதற்கு முன்னதாக இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் மும்பையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

முதல் டெஸ்ட் போட்டியில் ரோகித் சர்மா பங்கேற்பது இன்னும் உறுதிபடுத்தப்படவில்லை. ஒருவேளை ரோகித் சர்மா முதல் டெஸ்ட் போட்டியில் இருந்து விலகினால் அணியை பும்ரா வழிநடத்துவார். ரோகித் சர்மாவுக்கு மாற்று தொடக்க ஆட்டக்காரராக அபிமன்யு ஈஸ்வரன் அல்லது கே.எல்.ராகுல் விளையாடுவார்.

மூத்த வீரர்கள் ரோகித் சர்மா, விராட் கோலி இருவரும் இந்திய அணிக்காக நிறைய சாதித்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நிறைய சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதிக உத்வேகத்துடன் இருக்கின்றனர். கடினமாக உழைக்கின்றனர். இருவரும் இந்த தொடரில் மீண்டெழுவார்கள்.

நியூசிலாந்துக்கு எதிரான தோல்வியால் சமூக ஊடகங்களில் வரும் விமர்சனங்கள் என்னை பாதிக்காது. சமூக ஊடகங்கள் யாருடைய வாழ்க்கையிலும் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. இந்திய அணிக்கு பயிற்சியளிப்பது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கவுரவம். இது மிகவும் கடினமான, அதேநேரம் மிகவும் மதிப்புமிக்க வேலை என எனக்கு தெரியும். ஆஸ்திரேலிய தொடருக்கு முழுமையாக தயாராகி, முழுமையாக கைப்பற்ற முயற்சிப்போம்." இவ்வாறு அவர் கூறினார்.

# 2வது டி20 போட்டி: பட்லர் அதிரடி.. வெஸ்ட் இண்டீசை வீழ்த்திய இங்கிலாந்து



இங்கிலாந்து கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் வெஸ்ட் இண்டீஸ் கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான டி20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டி20 போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று இருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி இன்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி, 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 158 ரன்கள் எடுத்தது. கேப்டன் ரோவ்மேன் பவல் அதிகபட்சமாக 43 ரன்கள் எடுத்தார்.

இதையடுத்து 159 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14.5 ஓவர்களிலேயே வெற்றி இலக்கை கடந்தது. இதன் மூலம் 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கேப்டன் பட்லர் அதிரடியாக விளையாடி 83 ரன்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 20 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# டி20 கிரிக்கெட் வரலாற்றில் கோலி, ரோகித்தை முந்தி மோசமான சாதனை படைத்த சஞ்சு சாம்சன்

இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான 2வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது. இதில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது.

அதன்படி நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 124 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக ஹர்திக் பாண்ட்யா 39 ரன்களும், அக்சர் படேல் 27 ரன்களும் அடித்தனர். முந்தைய ஆட்டத்தின் ஹீரோவான சாம்சன் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

இதனையடுத்து 125 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆப்பிரிக்க அணிக்கு இந்திய சுழற்பந்து வீச்சாளரான வருண் சக்ரவர்த்தி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை வீழ்த்தி கடும் நெருக்கடி கொடுத்தார். ஆனால் மற்ற பவுலர்களிடம் இருந்து அவருக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

19 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்த தென் ஆப்பிரிக்கா 128 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஸ்டப்ஸ் 47 ரன்கள் அடித்து அணி வெற்றி பெற உதவினார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக வருண் சக்ரவர்த்தி 5 விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தினார்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்த சஞ்சு சாம்சன் டி20 கிரிக்கெட்டில் மோசமான சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

அதன் விவரம்: சாம்சன் இந்த வருடம் மட்டும் 4 முறை டி20 போட்டிகளில் டக் அவுட் ஆகியுள்ளார். இதன் மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வருடத்தில் அதிக முறை டக் ஆகிய இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னர் விராட், ரோகித் மற்றும் யூசுப் பதான் தலா 3 முறை டக் அவுட் ஆகியதே அதிகபட்சமாகஇருந்தது.தற்போதுஅவர்களைமுந்தியுள்ள சாம்சன்இந்தமோசமானசாதனைபட்டியலில்முதலிடத்தை பிடித்துள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.